# DEPOSITION OF WITNESS

***IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, TIRUNELVELI.***

**O.S. No. 138/2018**

| | | |
|---|---|---|
| வா.சா.1 | – | செந்தில்முத்துகுமார் |
| தந்தை பெயர் | – | |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tmt.P.Maheswari in accordance with the Provisions of Act X of 1873 on **the 29th day of April 2026.**

(CRP. (MD) No.511/2023 dated 16.02.2026-ல் உத்தரவின் படி வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்டார். )

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். என் தரப்பில் கூடுதல் நிரூபண பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். கூடுதல் நிரூபண பிரமாண பத்திரத்தில் கூறியுள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என் தகப்பனார் பெயருக்கு LIC housing finance loan sanction செய்ததற்கான sanction letter மற்றும் மேற்படி தொகை என் தாயார் காசோலை மூலமாக திரும்ப செலுத்தப்பட்டது. அதற்கான LIC housing finance loan closing receipt வா.சா.ஆ.9. அதன் பிறகு மேற்படி வீட்டில் கட்டுமான வேலை செய்த வகைக்காக சாமுவேல்ராஜ் என்பவர் 24.12.2015 தேதியில் கொடுத்த பணப்பற்று ரசீது வா.சா.ஆ.10 (இந்த

ஆவணம் வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்று 1ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபணை பதிவு செய்து குறியீடு செய்யப்படுகிறது.) பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டும்.

(2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.)

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>–

LIC housing finance loan–ல் எனது தகப்பனார் வாங்கிய கடனுக்கான எல்லா தவணைகளும் பாக்கி இல்லாமல் செலுத்தி வந்தார் என்றால் அது பற்றி எனக்கு சரியாகத் தெரியாது. என் தகப்பனார் தபசில் சொத்தில் மாடி கட்டும்போது 1ம் பிரதிவாதி நகையை கனரா வங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்கினார் என்றால் தவறு. 1ம் பிரதிவாதி நகையை அடமானம் வைத்து தான் என் தகப்பனார் கடன் பெற்றார் என்றும், அதை 1ம் பிரதிவாதி தான் அடைத்தார் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களை எனக்குத் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய தாயாரின் தந்தை பெயர் முனியாண்டி என்றால் சரிதான். அவர் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் துப்புரவு பணியாளராக பணியாற்றினார் என்றால் சரிதான். என்னுடைய தாயார் என்ன படித்திருக்கிறார் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். என்னுடைய தாயார் திருமணத்திற்கு பிறகு ஏதாவது வேலைக்கு சென்றாரா என்றால் எனக்குத் தெரியாது. என் தந்தை பணியில் இருந்தபோது இறந்ததற்கான இறப்பு பலன்கள் எவ்வளவு வந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 2022 க்கு பிறகும் இன்றைய

Uploaded on 29.04.2026

தேதி வரை 1ம் பிரதிவாதியை தாவா வீட்டை அனுபவம் செய்ய விடாமல் பிரச்சினை செய்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு தயாரித்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. LIC க்கு நான் செலுத்திய பணம் எனது தகப்பனாரின் இறப்புக்காக கிடைத்த பணத்தில் இருந்து கொடுக்கப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மாடிப் பகுதியை கட்டி அனுபவித்து வருகிறார் என்றும், அதில் எனக்கு எந்தவிதமான பாகமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள கடந்த கால மற்றும் எதிர்கால வருமானம் எனக்குக் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவர் எதிர்கோரிக்கையில் கோரியுள்ளவாறு பரிகாரம் அவருக்குக் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Uploaded on 29.04.2026